**தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை.**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 22 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு. | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1) (அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டத்தை சரியாகத் தயாரித்திருக்காமை. | 2.2.1 |
| | | 2. செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை | 2.2.2 (அ) |
| | | 3. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.3.1 |
| | | 4. பாதீடு நடைமுறைச்சாத்திய மாக தயாரிக்காமை. | 2.8 (அ),(ஆ) |
| | | 5. கட்டு நிதி மதிப்பீடு தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| | | 6. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அணைத்து கணக்காய்வு நடவடிக்கைகளையும் உள்ளடக்காமை. | 2.13 |
| | | 7. நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாத செயற்திட்டம். | 2.2 (உ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1) (ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாகவும் சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்கானிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. பிரதான செயற்பணிக்கு முரணான செயற்பாடுகள் | 2.2.2 (ஆ) |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை | 2.2.2 (இ),(ஈ) |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.11 |
| | | 2. இணக்கமின்மை | 2.12 |
| 128(1) (ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள | 2.9 |
| 128(1) (உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை | 1. சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு வெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும், | | |
| 128 (1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதாகவும். | 1. முகாமைத்துவ பலவீனம் | 2.7 |
| | | 2. பெறுகை நடைமுறைகளிலுள்ள குறைபாடுகள் | 2.3.2 (அ), (ஆ), (இ) |
| 128 (1)(ஈ) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிக்கப்படுமெனவும் | 1. நட்டங்களும் சேதங்களும் | 2.6 |
| | | 2. நிதியுடன் தொடர்புபடும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக்கொள்ளாமை | 2.15 |

## 2 போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறுங்கு மற்றும் மஞ்சல் பயிர் முறையே 1883 ஹெக்டெயர் மற்றும் 932 ஹெக்டெயர் ஆகிய குறைந்ந பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்தன. இப் பயிர்களின் ஏற்றுமதி அளவு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 329.4 சதவீதத்தாலும் 6.4 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், வினைத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் குறைந்த உற்பத்திகளைக் காட்டிய ஏற்றுமதிப் பயிர்களின் பரப்பளவு எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான 10 மத்தியதர நாற்று மேடைகள் காணப்பட்டிருந்தும் அவை மொத்த நாற்று தேவைப்பாடுகளில் நாற்றுக்களை விநியோகித்தல் 930,489 அல்லது 3.5 சதவீதம் ஆகிய குறைந்த அளவாக இருந்தது. அதற்கிணங்க மத்தியதர நாற்று மேடைகளின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 2.2 திட்டமிடல்

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தால் ரூபா 74.2 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட 04 நடவடிக்கைகள் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயற்பாடுகள் அடைந்து கொள்ளப்படும் கால அட்டவணை குறிப்பிடப்படாததன் காரணமாக கட்டுநிதித் தேவைப்பாடு திட்டத்தில் சரியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் திட்டத்தை அமுல்ப்படுத்தும் அட்டவணை மற்றும் அந் நடவடிக்கைகளின் எதிர்பார்த்த பெறுபேறுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை.

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தால் 06 செயற்பாடுகளை ரூபா 600 மில்லியன் எதிர்பார்த்த கிரய இலக்குடன் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் (நிலுவையான விலைப்பட்டியல்களைத் தீர்த்து வைப்பதனை உள்ளடக்கி) அச் செயற்பாடுகளிலிருந்து ரூபா 271.92 மில்லியன் பெறுமதியான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 03 பிரதான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 08 உப செயற்திட்டங்களை 2017 திசெம்பர் 31 வரையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான செயல் நடவடிக்கைகளுக்கு முரணான செயற்பாடுகள்

திணைக்களத்தால் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது அதன் பிரதான செயல் நடவடிக்கைகளுக்கு முரணாக முன்னைய ஆண்டுகளுக்கான விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவாக ரூபா 22 மில்லியன் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) எதிர்பார்த்த பெறுபேற்று மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

செயல் நடவடிக்கைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 உப செயற்திட்டங்களுக்காக ரூபா 152.05 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்ளாமையின் காரணமாக ரூபா 114.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

-----------------------------------------------------------------------------------------

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 06 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 57 நானாவித செயற்திட்டங்களுக்காக ரூபா 600 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகளில் செயலாற்றல் குறிகாட்டிகள் குறிப்பிடப்படாததன் காரணமாக செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாத செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

மாத்தளை ஆராய்ச்சி நிலைய வளவில் 2015 யூலை 04 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட வாசனைத் திரவிய பூங்காவில் வாசனைத் திரவிய தகவல் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆம் அண்டுகளில் முறையே ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச் செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் மாதம் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெறுகைகளைத் திட்டமிடல்

---------------------------------------------

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் 11 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 676.90 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 403.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டங்கள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாது ஒரு வருடத்திற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) வழிகாட்டியின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை நடைமுறைக் கட்டங்களை கால ஒழுங்குடன் விபரிக்கும் வகையில் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்தல்

-----------------------------------------------------------

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச மிளகு கருத்தரங்கின் 45 ஆவது தொடருக்காக ரூபா 5.78 மில்லியன் பெறுமதியான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய கேள்விகளை வழங்கும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.10 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அனைத்து மாதிரிகளையும் பூரணப்படுத்திய ஆகக்குறைந்த விலையுடனான விலை மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) வழிகாட்டியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 6.23 மில்லியன் பெறுமதியான செயற்பாடுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 311,359 பெறுமதியான செயலாற்றல் பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சர்வதேச மிளகு கருத்தரங்கின் 45 ஆவது தொடரை செயற்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 2.03 மில்லியன் பெறுமதியான சேவைப் பெறுகைகளின் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.2 ஆம் வழிகாட்டியின்

பிரகாரம் தாமதமாகக் கிடைத்த விலை மனுக்கள் நிராகரிக்கப்படாது மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சர்வதேச மிளகு கருத்தரங்கின் 45 ஆவது தொடருக்காக ஹோட்டல் வசதிகள் மற்றும் தொடரை செயற்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 7.80 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) திணைக்களத்தினால் திறந்த கேள்வி மூலம் வாசனைத் திரவியங்களை சந்தைப்படுத்தும் போது கடந்த மூன்று ஆண்டு காலத்தில் பெறுகைத் தீர்மானங்களுடன் இணக்கமின்றி ரூபா 1.82 மில்லியன் பெறுமதியான 4,138.22 கிலோகிராம் வாசனைத் திரவியங்கள் அங்கீகாரமின்றி சந்தைப்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) பெறுகை அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாசனைத் திரவியங்களை சந்தைப்படுத்தும் போது பணத்தை ஒரே தடவையில் செலுத்தி அனைத்து பொருட்களையும் தலைமை அலுவலக வளவிலிருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும் கடந்த 03 ஆண்டு காலத்தில் பணத்தை ஒரே தடவையில் செலுத்தாது ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கால தாமதத்துடன் வாசனைத் திரவியங்கள் அகற்றப்பட்டிருந்தன.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எரிபொருள் நுகர்வை பரீட்சிக்காமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் 118 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரிசோதனை இடம் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பயன்படுத்தல்**

i. திணைக்களத்தால் நிதி குத்தகை முறைமையில் கீழ் 10 வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் குத்தகை தவணைப் பணமாக ஆண்டின் போது ரூபா 15,651,700 தொகையும் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணைக்காக ரூபா 2,185,401 தொகையுமாக அதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 17,837,101 ஆக இருந்தது. குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொண்ட வாகனங்கள் 206,234 கிலோமீற்றர்கள் ஓடியிருந்தன. அதற்கிணங்க அந்த வாகனங்களால் ஒரு கிலோமீற்றர் ஓடுவதற்காக ரூபா 86.49 செலவு செய்யப்பட்டிருந்தது.

ii. 2017 மார்ச் 22 ஆந் திகதி குத்தகை முறைமையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து வாகனங்களும் 3000 கிலோ மீற்றர்கள் ஓட வேண்டியதுடன் 08 வாகனங்களுக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 163,500 வீதமும் ஏனைய 02 வாகனங்களுக்காக ரூபா 165,000 மற்றும் ரூபா 198,000 ஆக குத்தகைத் தவணைப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. 2017 ஏப்ரல் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலம் தொடர்பான குத்தகை தவணைப் பணமாக 10 வாகனங்களுக்காக ரூபா 15,651,700 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட 10 வாகனங்களில் 07

வாகனங்கள் எந்த மாதத்திலும் 3000 கிலோ மீற்றர்கள் ஓடியிருக்காததுடன் எஞ்சியுள்ள 03 வாகனங்களும் 07 மாதங்களாக 3000 கிலோ மீற்றர்களை விட குறைந்த தூரத்தையே ஓடியிருந்தது.

**(இ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றுக் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | |
| i. | காணிகள் (ஹெக்டயர்) | 51.72 ஏக்கர் | உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை | உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை |
| ii. | கட்டிடங்கள் | 603 சதுர அடி | - மேற்படி - | 2017 மார்ச் 22 ஆந் திதியிலிருந்து |
| iii. | மோட்டார் வாகனங்கள் | 04 | - மேற்படி - | உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை |

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் கட்டிடங்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| சொத்துக்களின் எண்ணிக்கை/ அலகு/ அளவு | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| மாத்தளை பல்லேபொல விஸ்தரிப்பு உத்தியோகத்தர் அரசாங்க இல்லம் | பல்லேபொவ பிரதேச செயலகம் | சமர்ப்பிக்கப்படவில்லை | 2003 ஆம் ஆண்டிலிருந்து |
| மாத்தளை ஹுனுகெடலெ விஸ்தரிப்பு உத்தியோகத்தர் அரசாங்க இல்லம் | அம்பன்கஹ கோரலை பிரதேச செயலகம் | சமர்ப்பிக்கப்படவில்லை | 2004 ஆம் ஆண்டிலிருந்து. |

**(உ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்.**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 40 காணிகள் மற்றும் 33 வாகனங்கள் முறையாகப் பொறுப்பேற்கப்படாது திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லைகளை மீறி பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்தல்**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 94(2) இலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக திணைக்களத்தால் ரூபா 2.26 மில்லியன் பெறுமதியான 06 மூலதன செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள், சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக திணைக்களத்தால் ரூபா 120.7 மில்லியன் பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.6 நட்டங்களும் சேதங்களும்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் சர்வதேச மிளகு கருத்தரங்கின் 45 ஆவது தொடருக்காக ஹோட்டல் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.10 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்த விலை மற்றும் அனைத்து மாதிரிகளையும் ஒப்பிட்டு விலைமனுக்களைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்விகள் வழங்குதல் இடம்பெற்றிருக்காததால் ரூபா 411,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 2.7 முகாமைத்துவ பலவீனம்

தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறைந்த பயிர் அடர்த்தி மற்றும் பலவீனமான பயிர் முகாமைத்துவத்தின் காரணமாக குறைந்த உற்பத்திகளைச் சுட்டிக்காட்டிய விவசாய பயிர்களின் எண்ணிக்கை அளவை அதிகரிக்க கூடியதாக இருந்த போதிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றிலை பயிரிடக்கூடிய பரப்பளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறந்த கேள்விகளின் மூலம் உற்பத்தி செய்த வாசனைத் திரவியங்களை விற்பனை செய்யும் போது நிபந்தனைகளை மீறுகின்ற கேள்விதாரர்களை பெறுகை அறிவுறுத்தல் மற்றும் நிபந்தனைப் பத்திரத்தின் பிரகாரம் குற்றமிழைத்தவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உற்பத்தி செய்த வாசனைத் திரவியங்களை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 13.09 மில்லியன் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் வாசனைத் திரவியங்களின் தரத்தை பாதுகாக்கும் வகையில் பொதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு வாசனைத்திரவியங்களை தரப்படுத்திய தரவு முறைமை தாயரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கடந்த 03 ஆண்டு காலத்துள் ரூபா 11.61 மில்லியன் கேள்விப் பெறுமதியான உற்பத்தி செய்த வாசனைத் திரவியங்கள் தரப்படுத்தப்படாது சந்தைப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 55 சதவீத அளவான தேங்காய் விளைச்சல் குறைவடைவதற்கு காரணமான விடயங்கள் நாரம்மலை இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தால் பகுப்பாய்வு செய்து தீர்வினை சிபாரிசு செய்திருக்கவில்லை.

(ஊ) இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலைய வளவில் பயிரிடப்பட்ட தென்னைகளின் அறுவடையை விற்பனை செய்த போது சுதந்திரமான விலைக்குழு நியமிக்கப்பட்டு சந்தையில் காணப்படும் தேங்காய் விலைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலத்துள் ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருவன | 329.19 | 326.13 | 3.06 | 0.92 |
| | மூலதனம் | 415.80 | 244.92 | 170.88 | 41.10 |
| | மொத்தம் | 744.99 | 571.05 | 173.94 | 23.35 |
| 2014 | மீண்டுவருபவை | 407.64 | 407.35 | 0.29 | 0.07 |
| | மூலதனம் | 380.65 | 300.05 | 80.60 | 21.17 |
| | மொத்தம் | 788.29 | 707.40 | 80.89 | 10.26 |
| 2015 | மீண்டுவருபவை | 564.67 | 549.55 | 15.12 | 2.68 |
| | மூலதனம் | 428.10 | 416.57 | 11.53 | 2.69 |
| | மொத்தம் | 992.77 | 966.12 | 26.65 | 2.68 |
| 2016 | மீண்டுவருபவை | 603.31 | 566.76 | 36.55 | 6.06 |
| | மூலதனம் | 503.70 | 431.45 | 72.25 | 14.34 |
| | மொத்தம் | 1,107.01 | 998.21 | 108.80 | 9.83 |
| 2017 | மீண்டுவருபவை | 604.20 | 604.13 | 0.07 | 0.01 |
| | மூலதனம் | 674.20 | 400.52 | 273.68 | 40.59 |
| | மொத்தம் | 1,278.40 | 1,004.65 | 273.75 | 21.41 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 59 சதவீதமும் மீண்டுவரும் நிதி ஏற்பாட்டில் 99.98 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான செலவை விட அதிக செலவு நிறுவனத்தை செயற்படுத்துவதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை

  05 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 626.6 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 263.21 மில்லியயன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் அச் சேமிப்பு நிதி ஏற்பாட்டில் 18 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்களுக்காகத் தரப்பட்ட காரணங்களின் பிரகாரம் உரிய செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் சில

செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- ஒரு செலவு விடயத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 10,000,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 45.00 | 44.03 | 28.00 | 28.61 | 105.00 | 94.32 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்யாமை.**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்ககூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தமானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 1,105,438 ஆக இருந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் 04 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வீச்சில் காணப்பட்டு வருகின்ற போதிலும் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**(ஆ) ஒழுங்குவிதிகளுக்கு முரணாக கடன் வழங்குதல்**

திணைக்களத்தால் கடன்களைச் செலுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படாது 02 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட கடன் பணத்தில் ரூபா 563,550 கடன் மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.10 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0087/0017/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 2,536 ஆக இருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப்பிரமாணம் 371(2) இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணாக பதவிநிலையற்ற 08 உத்தியோகத்தர்களுக்கு 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 624,520 மொத்த தொகையான குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையால் திருத்திய நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயலுக்கான உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட ரூபா 431,850 மொத்த தொகையான குறித்த செயலுக்கான உப கட்டுநிதியானது செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 01 மாதத்திலிருந்து 03 மாதங்கள் வரையான கால வீச்சுடைய தாமத்தில் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஒரு பதவிநிலை உத்தியோகத்தருக்கு ஒரு தடவை வழங்கக்கூடிய உச்ச அளவான குறித்த செயலுக்கான உப கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்தும் 16 சந்தர்ப்பங்களின் போது 11 உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை மிகைத்து ரூபா 514,303 மொத்த தொகையான குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 420,579 முற்பணம் எதுவித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படாது கையில் வைத்திருக்கப்பட்டு முழுப்பணமும் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் பணம் கையில் வைத்திருப்பது சம்பந்தமாக தாபனவிதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 6.2 மற்றும் 6.7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முற்பணங்கள் வழங்கும் போது சரியான மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக 16 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 563,220 முற்பணத்தில் ரூபா 302,681 தொகை அல்லது 33.4 சதவீதத்திலிருந்து 73.84 சதவீதம் வரையான வீச்சுடைய பணம் மீண்டும் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஒரு உறுதியான செயற்பாட்டிற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 முற்பணத்தை தீர்த்து வைக்கும் போது 09 உத்தியோகத்தர்களால் அந்த எல்லையை மிகைத்து ரூபா 439,367 பணம் தமது தனிப்பட்ட பணத்திலிருந்து செலவு செய்து பின்னர் திணைக்களத்திடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**2.11 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை.**

திணைக்களத்தால் கீழே தரப்பட்ட பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பு |
| (ஆ) | கணனி, துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | பிணைப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (உ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணை இருப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647 (இ) |

| | | |
|---|---|---|
| (ஊ) | வாகனங்களை பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 (உ) |
| (எ) | பெறுகைக் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (ஏ) | தாவரம் சம்பந்தமான பதிவேடு | 2015 ஆகஸ்ட் 5 ஆந் திகதிய 2/2015 கணக்குகள் இலக்க திணைக்கள சுற்றறிக்கை |
| (ஐ) | அறுவடைப் பதிவேடும் விளைச்சல் பதிவேடும் | 2015 ஆகஸ்ட் 5 ஆந் திகதிய 2/2015 கணக்குகள் இலக்க திணைக்கள சுற்றறிக்கை |

## 2.12 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | XV ஆவது அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவு | 15,471,650 | இரண்டு உத்தியோகத்தர்கள் சம்பளத்துடனான கல்வி விடுமுறையைப் பெற்று வெளிநாடு செல்லும் போது பிணைமுறிகளில் பிணையாளர்களாக கையொப்பமிட்ட நபர்களின் ஆதனம் தொடர்பாக உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | - | |
| | நிதிப்பிரமாணம் 177(4) மற்றும் 491(அ) | | மாதாந்தம் "லெட்டர் எச்"கணக்கு தயாரித்து அதனை கணக்கீட்டு உத்தியோகத்தரினூடாக நிதிப்பிரமாணம் 491(அ) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | | |
| | 2016 திசெம்பர் 28 ஆந் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 5/2016 | - | தொடக்க காலாண்டில் பெறுகை நடவடிக்கை இடம்பெற்று பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரசாங்க கணக்குகள்/சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | 409,585 | (i) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளில் ஏனைய 03 தொகுதிகளின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று உத்தியோகத்தர்களின் கடன் மீதி ஒரே தொகுதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது. |
| | 188,120 | (ii) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளில் 04 உத்தியோகத்தர்களின் கடன் சம்பந்தமாக ஒரு காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.13 உள்ளகக் கணக்காய்வு**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 07 பந்தியின் பிரகாரம் முறைமைப் பகுப்பாய்வு மற்றும் செயலாற்றல் பகுப்பாய்வு தொடர்பாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தால் உள்ளகக்கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கும் போது அதிக கவனம் செலுத்த வேண்டிய செயற்பாடுகளை பரீட்சிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கட்டுபாடு

மாத்தளை ஆராய்ச்சிப் பண்ணையின் பிரதான களஞ்சியத்திற்கு பண்ணைப் பிரிவிலிருந்து கிடைக்கும் இருப்புக்களுக்காக பொருள் பெறுவனவுக் குறிப்பு வழங்கப்படாதிருந்ததுடன் பண்ணைப் பிரிவிலிருந்து களஞ்சியத்திற்கு ஒப்படைப்பது தொடர்பான விபரம் இல்லாதனால் பிடுங்குதல், செயன்முறைப்படுத்துதல், காயவைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி ஊதியங்களுக்கான செலவு**

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 514.95 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனிநபரின் செலவு ரூபா 461,009 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | நிரந்தரம் | நிரந்தரம் |
| (i) | சிரேஷ்ட மட்டம் | 84 | 67 | 17 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 28 | 05 | 23 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 800 | 647 | 153 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 353 | 275 | 78 |
| (v) | ஒப்பந்த அடிப்படை | 97 | *123 | - |
| | **மொத்தம்** | **1265** | **994** | **271** |

*அங்கீகரித்த பதவியணியினருக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 97 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. சேவை நிரந்தரமாக்கல் வழங்கும் போது 131 நபர்கள் சேவையாற்றியுள்ளதனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் 2015 செப்தெம்பர் 11 ஆந் திகதிய DMS/1227/viii ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அவர்களுக்கே தனிப்பட்டவை என நிரந்தரத் தன்மை வழங்கப்பட்டிருந்தது. நிகழ்காலத்தில் உள்ளபடியான எண்ணிக்கை 123 ஆக இருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட 97 பதவிகள் வரை வெற்றிடங்களை நிரப்புதல் இடம் பெற்றிருக்கவில்லை.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 271 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுமுறையைப் பெற்றுக்கொண்டு கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாது சேவையை விட்டுச்சென்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,651,500 தண்டப் பணத்தை அறவீடு செய்வது தொடர்பாக நீதிபதிக்குத் தெரியப்படுத்தியிருந்தும 2018 யூன் மாதம் வரை சட்டத் திணைக்களத்தால் பொருத்தமான நடவடிக்கைகள் சிபார்சு செய்யப்பட்டிருக்காததால் தண்டப் பணத்தையும் அறவீடு செய்ய முடியாதிருந்தது.

(iii) பதவியணியினர்களைப் பயிற்றுவித்தல்

திணைக்களத்தின் 05 பதவிகளுக்குரிய 90 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது எதுவித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதிவரை சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளின் 17 வெற்றிடங்களை உள்ளடக்கி 271 வெற்றிடங்கள் காணப்பட்டமையானது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 48 சதவீதமளவில் இருந்தமைக்காக அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.15 அரசாங்க உத்தியோத்தர்கள் பிணைவைத்தல்

நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் மற்றும் அரசாங்க பிணை கட்டளைச் சட்டத்தின் கீழ் பிணை வைக்க வேண்டிய போதிலும் மாத்தளை ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.